# இறைதூதன்

# Messenger of God

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
09 DEC 1999
PERIODICALS DIVISION

## இம்மாதச் செய்தி

ஒவ்வொரு பிள்ளையும் தனது தாய்
மகிழ்ச்சி அடையும் விதத்தில் நடந்து
கொள்ள வேண்டும் தாயிடம் இருந்து
அன்பினையும் நல்லாசியையும் தவிர
வேறெதுவும் வேண்டலாகாது.
தாய்மார் குழந்தைகள் நேர்வழியில்
நடக்கும்படி செய்ய முயர்ச்சி எடுக்கவேண்டும்
அத்தகைய தாய்மார்களே "தாய்" என
அழைக்கப்படவும், அத்தகைய மக்களே
"பிள்ளைகள்" என்று அழைக்கப்படவும்
தகுதி பெற்றவர்கள்.

**செய்திக் கட்டுரை**

(3ம் பக்கம்)

சர்வமதப் பத்திரிகை

மாதம் ஒரு முரசு

வைகாசி 1999

விலை ரூபா 10/-

முரசு 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதன் கருத்து

### பெற்றோரைப் பேணுவோம்

சாய்ராம்!

"தாயிற் சிறந்ததோர் கோவில் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"

இப்படியான நல்ல கருத்துக்கள் ஆதியில் இருந்தே நாம் அறிந்தவைதான். ஆனால் கலியுகத்தின் விசேஷமோ என்னவோ இவைகள் எல்லாம் தெரிந்தும் தெரியாத மாதிரி எங்களுடைய செயல்கள் அமைந்து விடுகிறது.

"ஒருவனுக்கு கடவுளிடம் பக்தி இருக்கிறதா இல்லையா ? எனபது முக்கியமல்ல, கண்கண்ட தெய்வங்களாக உள்ள தாயும் தந்தையுமே உண்மையில் கடவுளாவர். அவர்களுக்குச் செய்யும், சேவையும் அவர்களுக்குக் காட்டும் மரியாதையுமே கடவுளுக்கு அளிக்கும் மிக உயர்ந்த வழிபாடு ஆகும்" என பகவான் பாபா சொல்லுகிறார்.

ஆனால் இன்று எங்கள் பெற்றோர்களின் நிலை என்ன?

ஒரு சமயம் கைதடி வயோதிபர் மடத்தில் சேனவ செய்யும் பொருட்டு நமது இளைஞர் பிரிவைச் சேர்ந்த குழுவினர் சென்றிருந்தனர். அப்போது ஒரு தாய் கண்ணீர் வடியக் கூறிய கதையை விவரித்தார்கள்.

"பிள்ளைகளே ! நீங்களும் ஒரு தாய் பெற்றெடுதத பிள்ளைகள் தானே ? என்னுடைய அழுக்கடைந்த துணிகளையெல்லாம் தோய்த்து உலர வைத்து, என் உடல் அழுக்கையும் தேய்த்துக் குளிப்பாட்டுகிறீர்களே... உங்களைப் பெற்ற அம்மா அப்பா எவ்வளறு புண்ணியம் செய்தவர்கள் நானும் பிள்ளைகளைப் பெற்றேன். என்னத்தைக் கண்டேன். நிச்சயமாக கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார் உயர்ந்த வாழ்வும் உங்களுக்கு கிடைக்கும்" என அழுதபடியே வாழ்த்தினாள்

இந்தத் தாயின் கண்ணீருக்கு காரணம் யார்...? பெற்றோர்கள். தான் பிள்ளைகளைப் பெற்ற பெரும்பாலான பெற்றோர்கள் தன் பிள்ளைகள் படித்துப் பட்டம் பெற்று பெரும் டாக்டர்கள், எஞ்சினியர்கள் ஆக வந்து வெளி நாடு சென்று பெரும் பணம் திரட்ட வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர, நல்ல பண்புள்ள ஒழுக்கமான நாட்டுக்கும் வீட்டுக்கும் தேவையான பிள்ளையாக அவர்கள் வளர வேண்டும், என்று நினைத்து வளர்ப்பதில்லை.

தாய்க்குத்தான் பிள்ளைகளுக்கு நல்லவைகளைப் போதிக்கும் பொறுப்பு அதிகம் எவ்வளவோ புராண நீதிக் கதைகளும், நல்லசீர்திருத்தக் கதைகளும் உண்டு. அவற்றை எல்லாம் எடுத்து சொல்லி பிள்ளைகளுக்கு குழந்தையிலேயே இருந்து நற்பண்புகளைப் போதிக்க வேண்டும்.

பெற்றோரைப் பேணும் முறை, பாவம் செய்வதற்கு அஞ்சுதல், கடவுளின் மேல அன்பு, பக்தி இவற்றை பிள்ளைகள் மனதில் வளர்க்க வேண்டும்.

சாயி நிலையங்களில் இப்படிப்பட்ட போதனைகள் அடங்கிய மனித மேம்பாட்டுக்கு கல்வி சிறுவர்களுக்கு கற்பித்து கொடுக்கப்படுகிறது. பெற்றோர் குழந்தைகளை இப்படிப்பட்ட இடங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

குழந்தைகள் இப்படியான சத்சங்கத்தில் வளரும் போது சமூகத்தில் நீதியும் நியாயமும் தழைக்கும்

-ஜெய் சாய்ராம்-

## ஆசையினால் ஆண்டவனை மறக்கிறோம், அழிவைத் தேடிக் கொள்கிறோம்

வீரமகேந்திர புரியை ஆண்டு வந்த சூரபதுமன் முதலானோர் தங்கள் இராச்சியங்களை விரிவாக்கும் ஆசையினால் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் தான் ஆழ வேண்டும் என்றும் இந்திரன் முதலான தேவர்களை தனக்கு அடிமையாக்கி இந்திராணியை தன் வசப்படுத்த வேண்டும் என்ற தீய நினைவுகளுடன் செயல்ப் பட்டான். தேவர்கள் முனிவர்களையும துன்புறுத்தினான்.

உண்மையில் சூரபதுமன் பெரும் தவவலிமை பெற்றவன் கல்வி, கேள்வி, ஞானத்தில் சிறந்தவன் தவம் செய்து சிவபெருமானிடம் வரங்கள் பெற்றான் யாகங்கலைச் செய்து பெருவலிமையை அடைந்தான் ஆனால் பெற்ற ஞானம், வரங்கள், யாகங்களினால் ஏறபட்ட நன்மைகள் எல்லாம் தீய வழியிலேயே செலவழித்தான்.

தேவகுல விஸ்வகர்மாவின் மகளாகிய பதுமகோ மளையை மணந்து பட்டத்தரசியாக்கி அவள் மூலம் கட்டழகும் வீரமும் நிறைந்த ஒரு புதல்வனை பெற்றான. அவன் தொட்டிலில் உறங்கும் போது சூரிய கிரகணம் அவன் முகத்தில் பட்டு விட்டது பாய்ந்து சூரியனைப் பற்றிக் கொண்டு வந்து தொட்டில் காலுடன் கட்டிச் சிறைப்படுத்தினான அதனால் அவனுக்கு பாணுகோபன் என்ற பெயர் வந்தது. இப்படிப்பட்ட பெரும் கீர்த்தியும் வீரமும் நிறைந்த பிள்ளைகளைப் பெற்றான் பேராசையினால் அழிந்தான்.

ஆசை வரலாம் அது மற்றவர்களுக்கும் தனக்கும் துன்பத்தையும் அழிவையும் தரக்கூடிய அளவு வரக்கூடாது (முன்னால் இருந்த பிள்ளைகளைப் பார்த்து) பிள்ளைகளே! நீங்கள் அப்பர் அம்மாமீது ஆசை வைக்கலாம் உங்கள் பாடப் புத்தகத்தின் மீது ஆசை வைக்கலாம் ஆனால் 'ஐஸ்கிறீம்' மீது ஆசை வைத்தால் பற்கள் எல்லாம் பழுதடைந்து விடும்.

வெறும் சருகை உண்டு வாழும் பெரும் தவவலிமை பெற்ற துறவி இருந்தார். அவருக்கு மாற்றிக் கட்டுவதற்கு இரண்டே இரண்டு கோவணத் துணிதான் இருந்தது குளித்து விட்டு கட்டியிருப்பதை அலம்பிப்போடுவார் மற்றதைக் கட்டுவார் ஒரு நாள் அவர் தோய்த்து தன் ஆச்சிரமக் குடிசையில் காயவைத்த போது எலி ஒன்று வத்து அதை நறுக்கி துளை போட்டு விட்டது.

> மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவத்தின் 8ம் திருவிழா அன்று பேசிய கந்தபுராண சொற்பொழிவின் ஒருபகுதி இங்கு பிரசுரமாகியுள்ளது. பிரசங்கத்தை ஆற்றியவர் திரு. ந. சிவசண்முகமூர்த்தி அவர்கள்.
>
> தொகுப்பு: கே. உஷா

பார்த்தார் ஒரு பூனையை வளர்த்தால் இந்த எலித்தொல்லையில் இருந்து தப்பலாம் என எண்ணி பூனையை தேடித்திரிந்து கறுப்பு சிவப்பு வெள்ளைநிறம் கொண்ட பூனையை வளர்த்தார்.

நாளடைவில் பூனை குட்டி போட்டதுதாயும் குட்டிப் பூனைகளும் சேர்ந்துபசியால் அழுதன. பார்த்தார் ஒரு பசுவை வளர்த்தால் தானே பால் கறந்து பூனைகளுக்குக்கொடுத்து தன் தேவையையும் பூர்த்தி செய்யலாம் என நினைத்தார். பசுவை வேண்டினார் அதைப்பராமரிப்பதிலும் பால் கறப்பதிலும் பூனைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் அவர் காலம் செலவழிந்தது.

இதனால் ஆண்டவனை நினைந்து தவம் செய்யும் நேரம் குறுகியது 'முன்பெல்லாம். முழுநாளும் ஆண்டவன் சிந்தனையிலேயே இருந்தேனே இப்போது ஒருபக்கமாக இருந்து இறைவனைச் சிந்திக்க முடிவதில்லையே! என சிந்தித்தார்.

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் அவள் எல்லாவற்றையும் பார்ப்பாள் நான் நிம்மதியாக தவத்தில் ஈடுபடலாம் என முடிவெடுத்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்தார். அவர் நினைத்ததுக்கு மாறாக தெய்வ சிந்தனைக்கு இடம் இல்லாது போய்விட்டது இதற்கெல்லாம் காரணமென்ன? ஆசைதான்

பெரும் தவவலிமை படைத்த துறவி சாதாரண மனித நிலைக்கு தாழ்ந்து போனார் சூரபதுமனும் ஆயிரத்தெட்டு அண்டங்களை தான் ஆழவேண்டும் என்ற ஆசையினால பெரும் தவவலிமையினால் பெற்ற கீர்த்திகளை இழந்து இறுதியில் முருகப் பெருமானால் அழிக்கப் பட்டான்.

* * * *

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் எனப்படும் ஆறும்விலக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோருக்கு அன்புடன் சேவை செய்ய ஆண்டவன் அருள் கிட்டும்

**- பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா -**

## தெய்வ சொரூபிகளே...

நாம் உலக வழக்கில் தாய், தந்தை, குரு தெய்வம் என்ற வரிசையில் கூறப்படுவதைக் கேட்கிறோம். இந்த வரிசைக் கென்று ஒரு தனிச் சிறப்பு உண்டு. குழந்தை பிறந்ததும் அதனைத் தாய்தான் காண்கிறாள் அறுதக் குழந்தையை இரண்டாவதாக தந்தைக்கு எடுத்துக் காட்டுகிறாள். தந்தை குருவிடம் மகனை ஆட்டுச் செல்கிறார். குரு மாணவனை இறைத்தனமைக்கு கூட்டிச் செல்கிறார். இந்தநான்கு சொற்களின் உட்பொருளை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்

## தாய்க்கு முதலிடம்

ஒவ்வொருவரும் முதலில் தாய்க்கு முதலிடம் கொடுக்க வேண்டும் தன்னிச்சையாக இயல்பாகத் தாயிடம் அன்பு கொள்வதற்குப் பதிலாக செல்வத்திற்கும், பொன்னுக்கும் பேராசைப் பட்டு அவற்றைப் பிடுங்குவதற்காக தாயிடம் அன்பு கொள்வது தற்காலத்தில் வழக்கமாக உள்ளது.

தனது உடல், உயிர் அனைத்துக்கும் தாய் தான் காரணம் என்பதை இலட்சத்தில் ஒருவர் கூட உணர்வதில்லை. எப்படி இருந்தாலும் தாயார் தெய்வீகமானவள்.

மாத்ருதேவோ பவ; பித்ருதேவோ பவ;
ஆச்சரியதேவோ பவ; அதிதி தேவ்வா பவ;

அதாவது தாயினை தெய்வமாக நினை. தந்தையாரை தெய்வமாக நினை. குருவினைத் தெய்வமாக நினை. விருந்தினரைத் தெய்வமாக நினை, என எமது வேதம் எடுத்துரைககிறது.

இவர்களுள் தாய் முதலிடம் வகிக்கிறாள். எல்லோருக்கும் முதலாசிரியர் அன்னையாவர் அளவில்லா அன்பினையும் பாசத்தினையும் பொழிந்து; மகவின் நலனுக்காக இடைவிடாது முயன்று தந்தையுடன் பழக வழிவகுப்பவர் அன்னையாகும்

தற்காலத்துப் பிள்ளைகள் தாயின் உத்தரவினை மதிப்பதில்லை. ஆனால் அவளது சொத்துக்கு மட்டும் ஆசைப்படுகிறார்கள். அத்தகைய மக்களால் என்ன பயன்...? அவர்களைப் பெற்ற வயிற்றுக்கு அவர்கள் ஒரு சாபக்கேடு

## நன்றியுணர்வு முதன்மையானது

தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொருவரும் தவறுகள் இழைக்க நேரிடுகிறது; என்பதை தாய்க்குத்தான் எவ்வளவு கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதை மறக்கும தவற்றினை ஒரு நாளும் இழைக்கலாகாது. ஒருவன் என்ன தவறுகள செய்தலும் தாயிடம் கொண்டுள்ள அன்பு அவன் வாழ்வினைக் காப்பாற்றும். ஆற்றகள் மிகுநத இவ்வுடல் பெற்றோர்கள் நமக்களித்த மாபெரும் பரிசு.

எல்லா உயிர்களுக்கும் இறைவன் அதிகாரி என்றாலும் பெற்றோர்களே பிள்ளைகளுக்கு உடலை அளித்தவர்கள் களிமண்ணும் தண்ணீரும் இயற்கையின் பரிசு. ஆனால் அவற்றைக் கொண்டு குயவன்தான் பானைகளைச் செய்ய இயலும். ஆகையால் பெற்றோரிடம் நமக்குள்ள நன்றியுணர்வு, நமக்குள்ள முதன்மையான கடமை

இக்காலப் பிள்ளைகள் "பெற்றோரிடம் நாம் ஏன் நன்றியாக இருக்க வேண்டும்" என்று கேட்கிறார்கள். இப்போது தமது நடத்தை மூலம் தம் பெற்றோருக்கு மனத்துன்பம் அளித்தால் பிற்காலத்தில் அவர்கள் குழந்தைகள் இதேபோல அவர்களுக்குத் துன்பமளிப்பார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். செயலும் அதன் பிரதி பலனும் ஆகிய இந்த விதி எப்போதும் செயல்படுகிறது.

## 06 - 05 - 1999
## அன்னை ஈஸ்வரம்மா தினம

இளமை, செல்வம், வலிமை இவற்றை நினைந்து தற்பெருமை கொள்ளல் ஆகாது ஓர் ஏர் கண்டிவுனர் உனது உடலை குளுமைப்படுத்தலாம். ஆனால் இறைவனது அருள் மழை மட்டுமே கொதிக்கும் மூளையினையும் கொந்தளிக்கும் இதயத்தையும் குளுமைப்படுத்த வல்லது.

பெற்றோரிடம் யார் நன்றியுணர்வுடன் இருக்கிறார்களோ, பெற்றோருக்கு யார் அன்புடன் சேவை செய்கிறார்களோ அவர்களுக்கு அத்தகைய அருள் கிட்டும். நன்றியுணர்வு தாயிடம் தொடங்கி பின் தந்தைக்கும் குருவுக்கும் பரவ வேண்டும். இம் மூவருக்கும் நீங்கள் நன்றி தெரிவித்தால் அவர்களிடம் மும் மூர்த்திகளின் பிரசன்னத்தை உணர்வீர்கள். பிரம்மா, விஷ்ணு சிவன் ஆகிய மும் மூர்த்திகளையும் வழிபட்ட நற் பயனையும் பெறுவீர்கள்.

## வழிகாட்டும் விளக்குகள்

இன்றைய தினம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. உலகெங்கும் உள்ள பெற்றோர்கள் தங்கள் கடமையை உணர வேண்டும், என்பதற்காக, குழந்தைகள் வழி காட்டும் தெருவிளக்குகளாக ஒளிர வேண்டுமேயன்றி லட்சிய மின்றித் திரியும் தெரு நாய்களாக மாறக் கூடாது.

இது பெற்றோர்கள் கையில்தான் இருக்கிறது. தவறு செய்யும் போது அவர்களைத் தண்டிக்கத் தயங்கக் கூடாது. அவர்களிடம் தூய்மையான உள்ளுணர்வுகள் வளர பெற்றோர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

## பெற்றோர் செய்யும் தவறு

தற்காலத்தில் குழந்தைகளில் தொண்ணூறு சதவீதம் கெடுவதற்கு பெற்றோர்களே காரணம் என்பது துர்ப்பாக்கியமான உண்மை குழந்தைகளை அவர்கள் சமயம் அறிந்து கண்டிப்பதில்லை. அவ்வப்போது குழந்தைகளின் தவறான செயல்களைத் திருத்தினால் குழந்தைகள் நல்ல முறையில் வளர்வார்கள்.

குழந்தைகள் தவறான வழியில் செல்கையில் பெற்றோர்கள் அவர்களுக்கு இரக்கங் காட்டலாகாது. தவறு செய்யும குழந்தைகளை திருத்தாமல் இருத்தல் முறை தவறிய பாசமாகும். ஒழுங்கான நடத்தையில்லாத குழந்தைகள் இருப்பதால் என்ன பயன்...?

நூறு தீய மக்களால் திருதராஷ்டிரன் அடைந்த லாபம என்ன...? ஸ்ரீ கிருஷ்ணனும் விதுரனும் எச்சரித்தும் கூட அவ்வரசனால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை, கடைசியில் குடும்பம் முழுவதும் அழிக்கப்பட்டது.

குழந்தை பிறந்ததும் கொண்டாடுவதில் அர்த்தமில்லை. குழந்தை வளர்ந்து நற் பெயரெடுத்து புகழ் பெற்று, பெற்றோருக்கு பெருமை தேடித்தரும் தருணமே மகிழ்வு கொள்ள வேண்டிய தருணம்.

> தாயிடம் அன்பு கொண்டு அவ்வன்பினை இதயத்தில் போற்றி வைக்க வேண்டும். தாயின் அன்பிற்கு அருகதையில்லாதவனுக்கு யாருடைய அன்பினையும் பெற இயலாது.
>
> - பாபா -

ஒவ்வொரு பிள்ளையும் தனது தாய் மகிழ்ச்சியடையும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். தாயிடம் இருந்து அன்பினையும் நல்லாசியையும் தவிர வேறெதும் வேண்டலாகாது

தாய்மார் குழந்தைகள் நேர்வழியில் நடக்கும்படி வழி காட்ட வேண்டும். அத்தகைய தாய்மார்களே "தாய்" என்று அழைக்கப்படவும், அத்தகைய மக்களே பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதற்கு தகுதி பெற்றவர்கள்.

தாய்மார்களும் பிள்ளைகளும் ஒழுங்காக நடக்கும் போது நாடுநேர் வழியில் வளர்ச்சி பெறும் தர்மம் குடும்பத்தில் இருந்து உலகம் முழுமைக்கும பரவும்.

* * *

பெற்றோரை விளங்கி அவர்களுக்கு மதிப்பு தருவது ஒவ்வொருவரதும் கடமையாகும். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையிடம் கொண்ட பக்தி

- பாபா -

தன்னைப் பெற்றெடுத்து அன்புடன் வளர்த்து கவனத்துடன் காத்துவரும் தாயினிடம் அன்பு கொண்டு, அவ்வன்பினை இதயத்தில் போற்றி வைக்க வேண்டும். தாயின் அன்புக்கு அருகதையில்லாதவனுக்கு யாருடைய அன்பினையும் பெற இயலாது.

புண்டரிகன், தனது வயது முதிர்ந்த பெற்றோருக்கு பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்தான். அவ்வாறு செய்யும் போது, தனக்கென்று ஒரு விதி அமைத்துக் கொண்டு அதன்படி வாழ்ந்தான். தனது பெற்றோர்கள் தூங்கினாலல்லாம், அவன் உணவருந்துவதில்லை.

ஒரு சமயம் தன் பெற்றோரின் கால்களை வருடிப்பிடித்துக் கொண்டிருந்தான். அவன் பெற்றோரிடம் கொண்டுள்ள அன்பினை சோதிப்பதற்காக பாண்டுரங்கன் அவன் வீட்டிற்கு மாறு வேடத்தில் வந்து அவன் பின் நின்றார்.

புண்டகரின் தன் பணியில் கவனமாக இருந்தான். அவன் பெற்றோர்கள் இன்னும் உறங்கவில்லை. வந்தவர் புண்டரிகனைத் தன்னைப் பார்க்குமாறு கூறினார். புண்டரிகன் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பதற்காக கூறினார்.

இறைவன், எந்த உருவத்தில் நீ என்னைக் காண்கிறாய் என்று கேட்டார்

உங்களை நான் என் தாயாகக் காண்கிறேன், என்றார்; புண்டரிகன்.



அப்போது அவனின் குரு அங்கு வந்து வந்திருப்பவர் இறைவனே தவிர வேறில்லை என்று கூறினார்.

நான் சேவை செய்கின்ற பெற்றோர்களும் இறைவன தான் என்று புண்டரிகன் மறுமொழி கூறினான். குரு மனப்பூர்வமாக வற்புறுத்திக் கூறினார்.

'வந்திருப்பவர் இறைவன் என்றும் இன்னும் உணரவில்லையா? என்னுடைய பெற்றோர்களும் இறைவன் தான்'' என்று புண்டரிகன் மறுபடி கூறினான்.

பாண்டுரங்கன் அவனது உறுதியைக் கண்டு மகிழ்ந்து. ''புண்டரிகா. எனது தரிசனத்தை ஒரு முறைகூட அனுபவிக்க உனக்கு விருப்பமில்லையா? என்று வினவினார்.

புண்டரிகன் ''எனது தாய் தூங்கும் வரை தங்கள் தரிசனத்தை நாடேன்; தங்கள் தரிசனத்தை நான் பெறவேண்டுமென்று தாங்கள் விரும்பினல், சற்று நேரம் காத்திருக்கக் கோருகிறேன். என் தாய் தூங்கச் சென்ற பின் நான் தங்களை நாடி வருகிறேன்'' என்றான்.

புண்டரிகன் பெற்றோரிடம் இத்துணை பக்தி கொண்டிருந்ததால், இறைவன் மனமகிழ்ந்து பாண்டுரங்கனாகக் காட்சியளித்து அவனுக்குச் சேவை செய்தார்.

* * *

# அன்னையே தெய்வம்

மணிமாலை நான்கு காட்டியது' வானம் கருமேகங்களால் சூழப்பட்டு இருண்டு வந்தது. முன்னரே ஒரு முறை மழை பெய்து சாலைகளை நனைத்துச் சென்றிருந்தது. அப்போது பள்ளி விட்டதற்கான மணி அடிக்கவே, மாணவர் மழை வலுக்கும் முன் வீட்டிற்குச் சென்றுவிட விரும்பியவர்களாய் வாயிற்புறத்தைக் கடந்து விரைந்தனர்.

பள்ளியின் வாயிற்புறம் சாலையோரத்தில் வயதான ஒரு பெண்மணி நீண்ட நேரமாக நின்று கொண்டிருந்தாள். சாலையைக் கடக்க அவள் விரும்பினாள். சற்று முன் பெய்த மழையில் நனைந்துவிட்ட, வயதான மெலிந்த அவளது உடல் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது சாலை ஈரமாகையால் வழுக்கி விடுமோ என்ற பயத்தில் சாலையில் அடியெடுத்து வைக்கவே தயங்கினாள் தெருவில் போவோரையும் பள்ளிப் பிள்ளைகளையும் உதவிக்கு அழைத்தாள். ஒருவரேனும் திரும்பிப் பார்க்கக்கூட இல்லை.

நெடுநேரம் சென்று பள்ளிவாயிலாக மோகன் என்ற மாணவன் வெளியே வந்தான். அவன் ஒரு சிறந்த விளையாட்டு வீரன். அவன் உதவியற்று தவித்துநின்ற வயதான மூதாட்டியை பார்த்து விட்டான். அவனுக்கு இந்த மூதாட்டியை பார்க்கையில் உள்ளத்தில் வருத்தம் நிறைந்த பல எண்ணங்கள் ஓடின. பிறகு மெதுவாகவும் மூதாட்டியினருகே சென்று அன்பாக, ''அன்னையே பலவீனமான தாங்கள் ஏன் இந்தக் குளிரில் நிற்கிறீர்கள். தங்களுக்கு நான் எப்படியேனும் உதவ முடியுமா? என்று கேட்டான்.

தன்னைக் கவனிக்க இந்த உலகில் யாருமே இல்லை என்று கலங்கிய மூதாட்டியின் முகத்தில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் மிளிர்ந்தன. அந்த அன்பான சிறுவனை பார்த்து உள்ளம் மகிழ்ந்தவளாய் ''இந்த சாலையை கடக்க எனக்கு உதவுவாயா மகனே! என் வீடு எதிர்ப்புறத்தில் அந்தக் கடைக்கு பின்புறம் உள்ளது'' என்றாள்

மோகன் அந்த மூதாட்டியை அணைத்துக் கொண்டு மெதுவாக அழைத்துச் சென்றான் போகும் வழியெங்கும் அவள் அவனைப் புகழ்ந்து பேசியவாறு சென்றார். மோகன் அவளை அவளது வீட்டின் கதவருகே கொண்டு சென்று விட்டு விட்டு திரும்புகையில் தன் இரு கரங்களையும் உயரத்தூக்கி ஆசி கூறியவளாய், கண்களில் நீர் சோர நன்றியர்ன குரலில் ''கடவுள் என்றென்றும் உன்னை இன்பமாக வைப்பாராக!'' என வாழ்த்தினாள்'

தன்னுள் புதிய பலம் ஏற்பட்டது போல் உணர்ந்த மோகன் விளையாட அழைத்த நண்பர்களிடம் விரைந்து சென்றான் யாரோ ஒரு மூதாட்டிக்காக ஏன் இத்தனை கஷ்டப்பட்டு உதவினாய்? என்று அவர்கள் கேட்டனர். 'அவள் யாரோ ஒரு தாயல்லவா! அதனால்தான் அவளுக்கு உதவினேன்'. என்று அழுத்தமான குரலில் விடையளித்தான் மோகன்.

''நீ எதற்காக பிறருடைய தாய்க்கு உதவ வேண்டும''? என்று மீண்டும் ஒரு நண்பன் கேட்டான்' ''ஏனெனில். என்றாவது ஒரு நாள் நான் அருகில் இல்லாத போது என் அன்னைக்கும் வயதாகி இதே போன்ற ஓர் உதவி தேவைப்பட்டால் யாராவது அவளுக்கு உதவுவார்கள் அல்லவா? ''என்று அமைதியாகக் கூறினான் மோகன். அவனது விடை நண்பர்களை உருக்கி விட்டது ''நீ உன் அன்னையை பற்றி மிகவும் பெருமை கொண்டுள்ளாய்'; என்று மேலும் அந் நண்பன் கூறினான்.

'கட்டாயம் அங்ஙனமே பெருமைப்படுகிறேன் பெற்ற தாயைப் பெருமையோடு நினைக்காதவன் மதிக்கத்தகுந்த மகனே அல்லன்'' என்று தக்க பதிலைச் சொன்னான். தாயைப் போற்றும் தனயனான மோகன்.

★ ★ ★

**குழந்தையாக இருக்கும் போது தாயையும் தந்தையையும் மதிக்கவேண்டும். இளைஞனாக குருவையும் மதிக்க வேண்டும். வயது வளர வளர பெரியவர்களையும் மதிக்கும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.**

– பாபா –

பணிவுடன் பிறர்க்கு பணிகள் செய்திடுக. பகவான் உமக்கு நற்கதி அருள்வார். - பாபா -



# நனைந்தனைய திருவடி எம் தலை மேல் வைத்த நாயகன் சிவசாயி

சுவாமியிடம் மிக குறுகிய காலத்தில் தான் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. அதற்கு காரணம எமது குழந்தை சுவர்ணலதா அவளிடம் காணப் பட்ட குறைபாடு எமது குடும்பத்தை தாங்க முடியாத சோகத்தில் ஆழ்த்தியது. இக்காலத்தில் சுவாமியை மிக ரகசியமாக வழிபட்டு வந்த எனது துணைவியார் திடீரென ஒரு நாள் தமது ரகசியத்தை எனக்குத் தெரிவித்தார் நான் வாயில் வந்தபடி அவரைத் தூற்றி ''நாம் சைவ சமயத்தவர்கள் நீர் ஏன் முஸ்லீம் சமயத்தைச் சேர்ந்த ஒரு மனிதனைக் கும்பிட முயல்கின்றீர்'' என்று சற்றுக் கடுங்கோபத்துடன் கூறி பாபா வைக் கும்பிட வேண்டாம் என்று கூறினேன்,

வற்புறுத்திக் கூறியதனால் அவரால் ரகசி யமாகவோ பரகசியமாகவோ இவ்வழிபாட்டை தொடர முடியவில்லை இவ்வாறு சர்ச்சைகள் குடும்பத்தில் பூகாகரமாக உருவெடுத்த வேளை யில் தான் எமது இளையமகள் பிறந்தாள். அவள் பிறந்து இரண்டு வயது வரை அவள் வாய் பேச முடியாதவள் என்பதை எம்மால் கண்டு கொள்ள முடியவில்லை. டாக் டரிடம் சென்று அவரது குறைபாட்டைக் கூறி னோம், அவர் கூறினரார்

''இந்தப் பிள்ளைக்கு காதில் ஒலி வாங்கும் பகுதி பிறப்பிலேயே இல்லை குருடர் செவிடர் பாடசலையில் சேர்த்து படிப்பியுங்கள்'' என்ற அவரது இக்கூற்றினால் எமதுள்ளம் துவண்டது.

இலங்கையில் உள்ள பல வைத்திய நிபுணர் களை நாடி நாம் சென்றோம். முதல் முடிவில் எதுவித மாற்றமும் அவர்களால் தெரிவிக்கப்பட வில்லை. எமது குலதெய்வம் அன்னை ஸ்ரீ நாக பூஷணிக்கு நேர்த்திக்கடன்களை செய்தோம்.

இவ்வேளையில் பகவான் கனவில் தோன்றி தன்னிடம் வரும்படி எம்மை அழைத்தார் அதை அசட்டை செய்தேன், இவ்வாறு ஒரு வருடம் ஓடி உருண்டது. மீண்டும் சுவாமியின் வற்புறுத்தல் ஏற்பட்டது. சுவர்ணாவின் வயது அப்போது நான்கு.

நானும் அவளும் புட்டபர்த்தி செல்ல முடிவாகியது இவ்வேளையில் நாச்சிமார் கோவி லடி பாபாவின் இல்லத்தில் 1992 சிவராத்திரிக்கு திருநீற்றுப்பதிகம் பாடவேண்டிய பொறுப்பு என்க்கு வந்தது, சுவாமியிட்ட கட்டளை எனவும் கூறப்பட்டது. அன்று எனக்கு குறைந்தது ஐந் துக்கு மேற்பட்ட அரங்கிசை நிகழ்வு இவற்றை விரைவாக முடித்துக்கொண்டு அதிகாலை நான்கு மணி பாபாவின் இல்லம் வந்து சேர்ந்தோம்

அங்கு போனதும் உடனடியாக ''திருநீற் றுப் பதிகம் பாடும்படி அம்மா கட்டளை'' சுவாமி அங்கு பிரசன்னமாகி அளப்பரிய லீலை களைப் புரிந்து கொண்டிருந்த நேரம் நானும் எனது பக்கவாத்திய உதவியாளர் திரு எம். மகேந்திரனும் கூடவே அமர்ந்து அடி யார்கள் மத்தியில் அப்பதிகத்தைப்பாடிக் கொண் டிருந்தோம். எனக்கு உடம்பு வெகுவாக களைத்து இயலாத கட்டம் திடீரென 10ம் பாடல் பாடும் போது.

குண்டிகைக் கையர்களோடு .....
கண்திகைப்பிப்பது நீறு

பாடி முடிவதற்கிடையில் எம்மை நோக்கி ஒளிக்கீற்றுகள் நறுமணத்துடன் வருவது கண் மூடியிருந்த எனக்கு நுகர்வின் மூலம் தென்பட் டது. உடனே விழித்துப் பார்த்த போது எங்கும் என்றும் காணாத நறுமண விபூதிப்புகை மண்ட லமாக மண்டபம் காட்சியளித்தது திடீரென எமது சிரசில் சுவாமியின் கரம் இருப்பதை உணர்ந்தோம். எமது தேகமெல்லாம் விபூதி மழை பொழியப்பட்டது.

அடியார்களது ஓம் நமச்சிவாய உச்சாட னம் மண்டபத்தை நிரப்பிக் சொண்டிருந்தது. அன்று முதன் முதலாக சுவாமியின் அற்புத லீலைசகளைச் சுமார் இரண்டு மணித்தியாலங் கட்கு மேலாக அனுபவிக்க முடிந்தது. சிவராத்திரி முடிந்தகையோடு புட்டபர்த்தி செல்லும் மன வேகம உள்ளத்தில் சு ர்விட்டு எரியத்தொடங் கியது.

## நா. வி. மு. நவரெத்தினம்

(எம். பில்)

மூத்த விரிவுரையாளர் இசைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

அன்று சுவாமி எனது இளையமகளுக்குப் பக்கத்தில் சயனத்தில் இருந்தவாறே விபூதியை, மழையாக அமுதகிரணமாக பெய்வித்த காட் சியை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ்வதி விடப் பிரதிநிதியும் அருகிலிருந்து கண்டுகளித்த னர் இதன் புகைப்படம் இன்று ஜெனிவா தலை மையகத்திலும் நமது நாட்டிலும் பல இடங்களில் காணப்படுகின்றது'

சுவாமியின் இவ்வற்புத லீலையானது சம் பந்தராலும் திருமூலராலும் ஆயிரம் வருடங் கட்கு முன்னர் உணர்த்துவிக்கப் பெற்றது. ''முத்திதருவது எனும் பாடலில் வரும்.''

சத்திய மாவது நீறு
தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு
பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு
திரு ஆலவாயான் திருநீறே

(சம்பந்தர்)

எனவரும் பாடலடிகளாலும்

உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு
வாய் கோபுர வாயில்
தெள்ளத் தெளிந் தார்க்கு
சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும்
களாமணி விளக்கே

திருமந்திரம்

என்பவற்றாலும் காணலாம்.

சத்திய நாராயணன் என்ற திருநாமத் துடன், உலகில் கானும் பக்தர் குழாம் எனும் தக்கார் மூலம் நமக்குப் பக்தியைத் தந்து நாம் பரவும் சிவம் திருநாமம் சாயி எனத் தந்து நமக்கு அனைத்து சித்தியையும் தந்து நிற்பது. அதன் சீவன் சிவலிங்கமாக. உலகு ஏன்? நாம் எல்லாரும் நேரில் காண உடலில் இருந்து தோற் றம் பெற்று நமக்குத் திருக்காட்சியையும் அருள் மாட்சியையும் தருகின்றது.

மிகுந்த மகிமையும், அடையாளச் சின்னமும் உடைய தெய்வத்துவ வெளிப்பாடாகவே, நான் விபூதியை உருவாக்குகின்றேன் கடவுளின் வியா பகமான, அழியாத, அளவு கடந்த வடிவங்கள் எல்லாவற்றுக்கும் சின்ன மாக விபூதி அமைகிறது. அதாவது சடத்துவ மாற்றமடைகின்ற எல்லாப் பொருட்களும் எரிந்தவுடன் எஞ்சியி ருப்பது அதுவே.

- பாபா -

அதுவே சிவம் அதுவே மூலப்பரம் பொருள் அதுவே சதாசிவம் அதுவே அறுவகை நெறிகளின் மூலம் அதுவே சக்திகளது கரு, அதுவே பரப்பிரம மம் அதுவே சாயி என்ற திருநாமத்துடன் நம் முன் திருவருள் பொழி மானுட வடிவென்பதை உலகம் விரைந்து அறிய வேண்டும். இதனைக் காணும் பொருட்டே இப்பிறவி நமக்கு வாய்த் தது. 'இதையே அப்பர் சுவாமிகள்'

''வாய்த்தது நம் தமக்கு ஈதோர்
பிறவி மதித்திடும் மின்

என்பர் இவர் யார்? இவர் தான் சாயி இவர் பார்த்தற்குப் பாசுபதம் தத்தவர் பத்தருள் ளீர் என்பதும் அவர் திருவிருத்த வாக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட திருவாக்கு இது.

ஆனந்தம் வேண்டுமெனில் ஆண்டவனை நாடு. - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமலர்கள்

## சாயியின் வாக்கு

கெட்ட எண்ணங்களால் மனிதன்
துன்பததுடன் இருக்கிறான்
நல்ல எண்ணங்களினால் அவன்
உயர்ந்த புனிதனாகிறான்
மனக்கொந்தளிப்பு இல்லாத போது
சாந்தியாக இருக்கிறான்.
சத்ய சாயியின் இந்த வாக்கு
உண்மையைக் கூறும் வழியாகும்.

- பாபா -



## என் உள்ளம் கவர்ந்தவன்!

கொஞ்சும் சதங்கை கொண்ட பாதமும்
பள பளக்கும் பட்டாடைகள் தழுவிய
அழகிய கரு நீல மேனியும்!
பக்தர்களைக் கவரும்காந்தக் கண்களும்!
கொண்ட நீல வர்ணக் கிருஷ்ணா!
உன் மென் கரங்களின் குழலூதிப்
பசு நிரைகளையும் புட் கூட்டங்களையும்
உன்பால் மயக்கியவனே!
நீர் பாயும் கங்கைக் கரையினிலே
பச்சைப்பசே லெனும் புற்றரையினிலே
வீற்றிருக்கும் உன் எழிலினால்
என் உள்ளம் கவர்ந்தவனே!
கிருஷ்ணா என்னை மயக்கிய
மாதவனே! மலர் முகத்தவனே!
தருணம் இதுவேஇங்கு
மக்கள் துயர் துடைக்க
மனம் கொண்டு வாராய்!

செல்வி. செ. செல்வராணி.

## வந்திடு சமாதானமே

ஓடி ஓடி ,,ஓ'' ஓய்ந்து விட்டது பாதங்கள்
,,ஓ'' இறைவனே இனியும் இடம் பெயரணுமா...?
பொல்லாத போரே போய் ஒழிந்திடு...!
ஓ... வந்திடு சமாதானமே...!
ஓ.. பேதமே போய் தொலைந்துவிடு.
தொலைவில் உள்ளவர் அனைவரும வந்திட,
இலங்கை அன்னையின் கண்ணீர் நின்றிட,
ஓ வந்திடு சமாதானமே...!

T. சுதர்சன்

## மறக்கமுடியாத தூயவர்

கருநாகம் போன்ற அடர்முடியும்
ஒளி வட்டம் தெரியும் அற்புதத் தோற்றமும்
பொன் வண்ணமாய் மிளிரும் தூய நின்உடையும்
அருட் பொலிவோடு காட்சிதரும் உன் வதனமும்!
அருள் பொலியும் உன் அன்பு முகமும்
ஆறுதல் தந்திடும் உன் அபயக்கரமும்.
கருணை சொரியும் ஒளி மிளிர் கண்களும்.
கண் போல் என்னைக்காத்த பெருமையும்
மறந்திடமுடியுமா? என் சாயீசா தூயவா...!
நித்தம் என் தஞ்சம் உன் நினைவு முகம்
நித்தமும் நான் காணும் உன் கருணை முகம்.

திருமதி. சக்தியா நந்தகுமார்

## சாயீஸ்வரா!

சிவன் பிரம்மா விஷ்ணுவாக திகழ்பவனே சாயீஸ்வரா!
திரேதாயுகத்தில் உதித்தாயே ராமராக!
துவாபரயுகத்தில் அவதரித்தாயே கிஷ்ணராக— இன்று
கலியுகத்தில் பிரபஞ்ச நாயகனே சாயி அவதாரம்

கங்கையை சடையில் அணிந்தவனே சாயீஸ்வரா!
உந்தன் சிவருபம் தானோ அன்றைய ஷீரடி பாபா
இன்று புட்டபர்த்தி நாதனாக விளங்கும் சாயீஸ்வரா!
இது தான் உமது சிவசக்தி ரூபமோ சாயி பாபா

உமது இனி வரவிருக்கும் சக்திரூபமே பிரேமசாயி
என்ற தத்துவத்தை இன்று உணர்ந்தோம் சாயீஸ்வரா...!
எல்லாமாக விளங்கும் புட்டபர்த்தி வாசா;
உமது திருத்தாள் பணிந்தோம் சாயீஸ்வரா!

மாலா விஜயநாதன்
வெள்ளவத்தை

## அறிவித்தல்

### இலவச வைத்திய சேவை

மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையத்தினரால் மாதம் ஒரு முறை நடாத்தப்படும் இலவச வைத்திய சேவை இம்மாதம் 22ம் திகதி சனிக்கிழமை மாலை2.30 மணி - 5.30 மணிவரை நடைபெறும

**Dr. சிவராணி சிவசோதி**
(தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி)
மற்றும் குழுவினர்

இடம்: மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையம் (பிரிவு I),
மகேசன் வீதி, நவாலி

எத்தகைய கஷ்டங்கள் வந்த போதும் நம்பிக்கையை விட்டு விடாதே. - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "துன்பத்திற்கு காரணம் ஆசையே"

புத்தபிரானின் திருவருளைப் பெற்று ஆயிரமாயிரம் மக்கள் வாழ்க்கையின் பயனை அடைந்திருக்கிறார்கள். அவர்களிலே துறவற வாழ்க்கையை மேற் கொண்டு தெய்வத்தின் நிலையில் வைத்துப் பூஜிக்கும் நிலையை அடைநத பெண்மணிகளும் இருக்கிறார்கள்.

பௌத்த. பிக்ஷுணிகளில் மகான்களின் நிலையிலே வைத்து அன்றும் இன்றும் வழிபடுபவர்களில் படாசாரா என்பவளும் ஒருத்தி. அவளுடைய முற்பகுதி வாழ்க்கை சுருக்கமாக கீழே தரப்படுகிறது.

படாசாரா என்றால் பரிபூரண நல்லொழுக்கம் கொண்டவள் கடமைகளைச் சரிவர முழு அளவில் ஆற்றியவள் என்பது பொருள். அந்தப் பெயர் அவளுக்குத் துறவற வாழ்க்கையை மேற் கொண்ட பிறகு கொடுக்கப்பட்டது அவளுடைய இயற்கைப் பெயர் என்ன என்பது தெரியவில்லை. பண்டைக் காலத்தில் சிராவஸ்தி என்னும் புகழ் பெறற நகரம் இருந்தது. அந்த நகரிலே லேவா தேவி செய்து வந்த ஒரு பெரிய பணக்காரரின் குடும்பத்தில் படாசாரா பிறந்தாள.

## புத்த பூர்ணிமை 29 - 05 - 99

படாசாரா வளர்ந்து திருமணப் பருவம் எய்தினாள். அப்போது அவள் தனது தந்தையிடம் வேலை'பார்த்து வநத ஓர் இளைஞன் மீது மனம் கொண்டாள்..

இந்த விவரம் அவளுடைய தந்தைக்குத் தெரியாது. அவர் தம் போக்கில், தம்முடைய அந்தஸ்துக்கு ஏற்ற ஒரு பெரிய குடும்பத்திலே மகளைத் திருமணம் செய்து கொடுத்துச் சீரும் சிறப்புமாக வாழ வைக்கும் முயற்சிகளை மேற் கொண்டார்.

இந்த நிலையில் மனம் சங்கடப்பட்ட படாசாராவும் அவளது மனம் கவர்ந்த இளைஞனும் சிராவஸ்தி நகரத்தை விட்டே ஓடிச் சென்று விடுவது என்று முடிவு செய்தார்கள் அதன்படியே ஒரு நாள் இருவரும் இரகசியமாக நகரத்தை விட்டே கிளம்பித் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தை அடைந்தார்கள் கணவனும் மனைவியுமாக வாழ ஆரம்பித்தார்கள்.

சிறிது காலம் கடந்தது படாசாரா கர்ப்பவதியானாள், அவளுக்கு பிறந்தகத்துக்குச் செல்லும் ஆவல் மிகுதியாக இருந்தது ஆதலால் அவள் ''முதல் குழந்தை பிறக்க இருக்கும் இந்த சமயத்தில் என்னுடைய தாய் வீட்டில் இருக்க வேண்டும்'' என்று கணவனிடம் தெரிவித்தாள் ஆனால் அவளுடைய கணவன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை முதல் குழந்தை கிராமத்திலேயே பிறந்தது,

படாசாரா மீண்டும் இரண்டாம் முறையாகக் கர்ப்பம் தரிததாள் அப்போதும் அவள் பிறந்த வீடு செலலப் பெரிதும் விரும்பினாள். முன்பு போலவே அவளுடைய கணவன் மறுப்புத் தெரிவித்தான். ஆனால் இந்த முறை தனது தாய் வீட்டிற்குச் சென்றே ஆக வேண்டும் என்று படாசாரா பிடிவாதமாக இருந்தாள். முடிவில் கணவனும் அதற்கு ஒப்புக் கொண்டான்.

## - புராணக்கதை -

இருவரும் கிராமத்தை விட்டு சிராவஸ்தி நகரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள் ஆனால் தாய் வீட்டிற்குப் போய்ச் சேருவதற்கு முன்பாகவே வழியிலேயே படாசாராவுக்கு குழந்தை பிறந்து விட்டது.

அந் நிலையில் தாய்க்கும் குழந்தைக்கும் பாதுகாப்பாக ஒரு குடிசையை அமைக்கக் கணவன் நினைத்தான. அதன் பொருட்டு அவன் செடி கொடிகளைச் சேகரிப்பதறகாக பக்கத்திலே இருந்த ஓர் அடர்ந்த காட்டுக்குள் சென்றான். காட்டிலே அவனை ஒரு நாகம தீண்டியது அவன அங்கேயே வீழ்நது உயிர் நீததான.



பிரசவம் ஆகியிருந்த படாசாரா கணவனின் வருகையை வழிமேல் விழி வைத்து வெகு ஆவலோடு நோக்கி இருந்தாள். நேரம் கடந்தது கணவனோ வந்தபாடில்லை காரணம் புரியாத படாசாரா மனம் குழம்பினாள், காத்திருந்து காத்திருந்து மிகவும் கவலை கொண்ட நிலையில் தானே கணவனைத் தேடிச் செல்ல முடிவு செய்தாள்.

நடக்கக் கூடிய சக்தி அவளுடைய உடலில் இல்லை. அவளோ தள்ளாத நிலையில் இருந்தாள் என்றாலும் தானே எழுந்திருந்து கணவனைக் காட்டில் தேடத் தொடங்கினாள் கணவன் அரவம் தீண்டிப் பிணமாகக் கிடப்பதைப் பார்த்தாள். பேரிடி நெஞ்சம் கலங்கித் துடிதுடித்தது

பிறகு மூத்த குழந்தையை ஒரு கையில் பிடித்துக் கொண்டும் மற்றொரு கையில் சிசுவை அணைத்த படியும் படாசாரா தந்தையின் வீட்டை நோக்கி நடந்தாள்.

வழியிலே ஓர் ஆறு குறுக்கிட்டது, இரண்டு குழந்தைகளையும் அழைத்துச் கொண்டு ஒரே சமயத்தில் ஆற்றைக் கடக்க முடியாது. என்பது தெரிந்தது. ஆதலால் அவள் மூத்த குழந்தையைக் கரையிலே நிறுத்தி விட்டுப் பிறந்த சிசுவுடன் மறு கரையை அடைந்தாள். அங்கே இருந்த ஒரு கல்லின் மீது சில தழைகளையும் கொடிகளையும் பரப்பிச் சிசுவை அதன் மீது வைத்து மூடினாள்.

பிறகு மூத்த குழந்தையை எடுத்து வருவதற்காகக் கரையை நோக்கிப் புறப்பட்டாள். பாதி ஆற்றைக் கடந்து கொண்டிருந்த நிலையில் ஒரு பெரிய பருந்து மறு கரையில் இருந்த சிசுவை நோக்கி வேகமாகப் பாய்ந்து இறங்கியதைக் கண்டாள்

படாசாராவின் மனம் பதை பதைத்தது. அவள் பருந்தைத் துரத்துவதற்காக இரண்டு கைகளையும் தூக்கித்தூக்கி ஆட்டினாள். அவளுடைய செய்கையைக் கரையில் இருந்த மூத்த குழந்தை பார்த்தது அதுதன்னை தாயார் உடனே வருமாறு அழைக்கிறாள். என்று நினைத்துத் தணணீரில் இறங்கி விட்டது. படாசாரா எந்தக் குழந்தையையும் காப்பாற்றும் நிலையில் அருகில் இல்லை அந்த அபாக்கியவதி ஒரே சமயத்தில் சிசுவைப் பருந்து எடுத்துச் செல்வதையும் மூத்த குழந்தையை ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போவதையும் கண் முன்னால் கணடாள்.

வேறுகதி இல்லாத நிலையில் அவள் மனம் உடைந்தவளாக சிராவஸ்தி பட்டணத்தில் உள்ள தனது தந்தையின் வீட்டை நோக்கி நடந்தாள். அங்கே முதல் நாள் பெய்த கடும் மழையின் காரணமாக அவள் பிறந்து வளர்ந்த பழைய வீடு இடிந்து போயிருந்தது. ஊர்க்காரர்கள் வீடு இடிந்து விழுந்தபோது அவளுடைய பெற்றோர்களும் சகோதரர்களும் மாண்டு விட்டார்கள் என்ற செய்தியைத் தெரிவித்தார்கள்.

> பேராசையிலிருந்தே ஆசைகள் பிறக்கின்றன. பேராசையை மேலும் நலிவடையச் செய்தால் அசாந்தி சம அளவில் குறைந்து அசாந்தி மறைந்ததும் சந்தோசம் நிலை நாட்டப்படும்.
>
> - பாபா -

படாசாரவுக்கு தலை சுழன்றது முழு உலகமும் அவளுக்கு சுழலுவதைப் போல இருந்தது, அவளுடைய மூளை குழம்பியது, அவளுக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. ஆம் உண்மையாகவே அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது இப்போது அவள் வீதியிலே திரியும் ஒரு பைத்தியக்காரி ஆகி விட்டாள்.

புலம்பினாள், சிரித்தாள், அலறி அழுதாள் கண்டபடி பிதற்றிக் கொண்டும் பயங்கரமாகக் கண்களை உருட்டி விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டும் சுய அறிவு இல்லாதவளாக அந்தப் பைத்தியக்காரி ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தாள் ஒரு காலத்திலே பணியாட்கள் புடை சூழ்ந்து ஏவலுக்குக் காத்திருக்கச் செல்வச் செழிப்பிலே தாலாட்டி வளர்க்கப்பட்ட அந்தக் குலமகள் அழுக்கேறியும் கிழிந்தும் போதுமானதாக இல்லாததுமாகிய சிறு சிறு துண்டுத் துணிகளை ஆடையாக உடலில் சுற்றிக் கொண்டு திரிந்து கொண்டிருந்தாள்,

11ம் பக்கம் பார்க்க

உலகியல் மகிழ்ச்சி அநித்தியமானது. - பாபா -

# ✝ அன்பே மக்கள் உள்ளங்களைத் திறக்கும் திறவு கோல்

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிரா விட்டால் நான் ஒன்றுமில்லை. நல்லொழுக்கம் ஒரு சிறிதும் இல்லாதவன். கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் இவ் வார்த்தைகள் உள்ளன.

கிரேக்கருக்கு அவர் எழுதுகிறார். கொரிந்தியரும் அத்தேனரும் நாவன்மையைப் பெரிதும் பாராட்டுவோர், ஆகவே பவுலார் நாவன்மையை மூதன்முதல் குறிப்பிடுகிறார். ஆற்றலும் வல்லமையுள்ள சொற்களால் மக்களைத் தூண்டி விடுவது ஓர் அரிய செயலேயாம்.

மக்களைப் பெரும் பேச்சுகளால் தன் வயப்படுத்தும் நாவன்மை மிகச்சிறந்த பெரு வரம் ஆகும். அப்பேச்சுகள் அன்புடைய உள்ளத்திலிருந்து பிறவாவிடின் அவைகள் ஒலிக்கின்ற வெண்கலத்தினும் ஓசையிடுகின்ற கைத் தாளத்தினும் சிறப்புடையன அல்ல. அன்பே மக்கள் உள்ளங்களைத் திறக்கும் திறவுகோல்.

சில ஆண்டுகளுக்கு முன், நியூயார்க் நகரில் தாழ்வுற்று அழுக்குப் படிந்து காணப்படும் பையன்களுக்கு உதவி புரியும் ஓர் உதவி நிலையத்தினர் அந்நகரையடுத்துள்ள சிற்றூர்களில் வாழும் உழவரிடம் அச்சிறுவர் சிலரைத் தங்கள் வீடுகளுக்கு கொண்டுபோய் வைத்திருக்குமாறு விண்ணப்பஞ் செய்தனர்.

நாட்டுப் புறத்திலுள்ள சிற்றூர்கள் கடவுள் படைப்பாகிய பசும்புல். மரங்கள், அழகிய பெரு வெளிகள் முதலியவற்றை அப் பையன்கள் முதல் முறையாக அப்போது தான் கண்டனர், அவர்களில் ஒரு சிறுவன் ஓர் உழவர் இல்லத்திற்கு அவர்கள் மதச்சார்பான கூட்டங் கூடியிருந்து அருந்தப் போகும் தருணத்தில் வந்து சேர்ந்தான் அச் சிறுவனை ''வார்வ்ரேட்'' என்று அழைத்தனர். அவனுக்கு அப்பொழுது என்ன ஒழுங்கு செய்வதென்று அவர்களுக்கு விளங்க வில்லை. அவன் இடையூறாய் இருக்கக் கூடும் என்று எண்ணித் தங்களோடு அழைத்துச் செல்ல விரும்ப வில்லை.

## - விராய்ஈ°°ப்ரும் -

ஏதாகிலும் திருடி விடுவானென்று அஞ்சியதால அவனை வீட்டில் விட்டு செல்லவும் மனம் கொண்டிலர் எனினும, இறுதியிம் அவனை விருந்துக்கு அழைத்துச் சென்றனர்.

சிறுவர்கள் ஆற்றில் மிகவும் விரைவாக ஓடும் நீரோட்டத்தில் தெப்பம் விட்டு பெரு மகிழ்ச்சியுடன் விளையாடினர். பையன்களில் ஒருவன் தெப்பத்திலிருந்து தவறி விழுந்து விட்டான் பெரியவகர்ள் நெடுந் தொலைவில் இருந்தனர்.

பையனுடைய கூக்குரலைக் கேட்டதும் அவனைத் தப்புவிக்க ஓடி வந்தனர். அவர்கள் வருவதற்குள் ''வார்வ்ரேட்''என்னும் ஒரு சிறுவன் வெள்ளத்தில் பாய்ந்து பையனைக் கரை சேர்த்துக் காப்பாற்றினான்.

இலை யுதிர் காலத்தின் இறுதிப் பாகம் மிகவும் குளிர்ச்சியான காலமாயிருந்தது. தண்ணீரும் மிகக் குளிர்ந்திருந்தது. சிறுவன் தப்பி வந்தவுடன் அவர்கள் மேற்சட்டையைக் களைந்து அவற்றினால் அவனைப் போர்த்தினர். அன்னை போல் பேணினர். முத்தமிட்டு பரபரப்புடன் அவனைச் சூழ்ந்து நின்றனர். அவனைக் காப்பாற்றிய சிறுவனோ குளிரால் நடுங்கிக் கொண்டு கூட்டத்தின் ஒரு பக்கத்தில நின்றான்.

அச் சிறுவனுக்குக் கொஞ்சப் பணம் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென ஒருவர் பேசினார். அனைவரும் ஒருங்கே கூடி பத்து, பதினைந்து டாலர் சேர்த்து அதைத் தங்கள் ஞாயிற்றுப் பள்ளி மேற்பார்வையாளர் வாயிலாய் அவனுக்கு அனுப்பினார்கள்

> உகியல அன்பு எடுத்துக் கொள்கிறதே தவிர கொடுப்பதே இல்லை. தெய்வீக அன்பு கொடுக்கிறதே தவிர எடுத்துக் கொள்வதே இல்லை. இதுவே அவற்றுககிடையே உள்ள வேறுபாடு.
>
> - பாபா -

அவர் அங்கு சென்று சிறுவனை நோக்கி சிறு தம்பி எங்கள் நன்றி பாராட்டுக் கடையாளமாக நாங்கள் உனக்கு இதைக் கொடுக்கிறோம். என்று சொல்லி அதை அவனுக்கு அளித்தார் சிறுவனோ குளிரினால் நடுங்கிக் கொண்டு அவரை நோக்கி,

''ஐயா உங்கள் பணம் எனக்கு வேண்டாம் நீங்கள் ஏதாவது எனக்கு உதவி செய்ய விரும்பினால் அன்பு காட்டும்படி ஒருவரிடம சொல்லுங்கள் என்றான்.

# ஆண்டவன் என்னை ஏன் படைத்தார்?

அல்லா சொல்லுகிறார். ''பூமிக்கு மேலாக நாம் என்ன என்னவெல்லாம் படைத்திருக்கிறோமோ அவை அனைத்தும் பூமியை அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றன.

அழகிய மாட மாளிகைகள், அழகிய மரம் கொடிகள், அழகிய ஆறுகள், அழகிய சமுத்திரங்கள் எத்தனை எத்தனை அழகுகளை அல்லா பூமிக்கு மேல் படைத்திருக்கிறான். காரணம் பூமியை அலங்கரிப்பதற்காகவே.

இப்படிப் பூமியை அலகரித்த அல்லா இந்தப் பூமியில் ஏன் என்னைப் படைத்தான்.

இத்தனை மனிதர்கள் மத்தியில் யார் நன்மை சொல்கிறர்ர்களோ எனச் சோதித்துப் பார்ப்பதற்கு பூமியை அலங்கரித்து வைத்திருக்கிறோம்.

உலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் - என்ன பேச வேண்டும் எதனைப் பார்க்க வேண்டும் எதனைக் கேட்க வேண்டும் எதை நிவனக்க வேண்டும்... என்பவைகளை எல்லாம் நாம் சிந்தித்து எமது வாழ்க்கையை சீர் செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இறைவன் சொல்கிறார்.

> உலகம் என்பது செயற்களமாகும். உன்னுடைய கடமைகளைச் செய்து கொண்டிருப்பாயாக. களைப்படையும் வேளையில் அல்லாவை நினைத்துக் கொள். அவன் உதவியை நாடு. அவன் உனக்கு பலமும் சக்தியும் தருவான்.
>
> இஸ்லாம் போதனைகள்

உலகில் இறைவனுக்குப் பயந்து வாழ்ந்தவர்கள் இறைவனின் தண்டனைக்கு அஞ்சி வாழ்ந்தவர்கள் பூஞ்சோலைகளிலேயே நாளை மறுமையிலே, மதுரமான நீரோடைகளில் இருந்து அவர்கள் நீர் அருந்துவார்கள்.


இறைவன் அவர்களுக்கு கொடுத்தவைகளை அவர்கள் அனுபவிப்பவர்களாய் இருப்பார்கள் காரணம் அவர்கள் உலகத்தில் நன்மை செய்பவர்களாக இருந்தார்கள்.

அல்லா ஒரு போதும் வாக்கு மீறமாட்டார். அவரை அஞ்சி ஒழுகி நடப்பவர்களுக்கு தருவேன் என்று வாக்களித்தபடி நிச்சயமாக அவன் தருவான். உள்ளத் தூய்மைக்கும் எண்ணங்களிற்கும் ஏற்ப அல்லா கூலிகொடுப்பவனாக இருக்கின்றான்

அன்பர்களே ! மறுமையில் அல்லா இத்தனை சிறப்புக்களைக் கொடுப்பதற்கு உலகத்தில் இந்த மனிதர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்கப் போகிறீர்களா ? அல்லா கூறுகிறார் அதற்கு விளக்கம். இரவில் கொஞ்ச நேரம் தூங்குவார்கள் அப்படி என்றால் அதிகமான வேளையிலே அரட்டை அடித்துக் கொண்டு இருப்பார்களா வீணான பேச்சுக்களிலே ஈடுபடுகிறார்களா பிழையான காட்சிகளைக் காண்பதிலே களிக்கிறார்களா ? இல்லை. அல்லா சொல்கிறார், கொஞ்ச நேரம் தூங்குவார்கள் நடுநிசி வேளையிலே மன்னர்கள உறக்கத்தில் மூழ்கி இருக்கும் போது அவன் இறைவனிடத்திலே தொழுகை செய்பவனாக இருப்பான்.

அன்புடனே அன்பு மட்டுமே நிறைந்த சமுதாயத்தினுள் சென்று செயற்படுங்கள்.- பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்ற இதழ் தொடர்ச்சி ---

## அத்தியாயம் - 14

### சித்ர கூடம்

சித்ர கூடம் சென்ற போது சீதை களைப்படைந்தது போலத் தோன்றியது. இராமனும் சீதையும் ஒரு பாறையின் மேல் அமர்ந்தார்கள். அப்போது இராமன்,

''இலட்சுமணா ஒரு பர்ணாசாலைகட்டு', என்றார். சீதா மிகவும் களைப்பாக இருக்கிறாள் என்றார்.

''அண்ணா. நான் எந்த இடத்தில் கட்டுவது'' என்று இலட்சுமணன் கேட்டான். அதற்கு இராமர்,

உனக்கு எந்த இடத்தில் கட்ட விருப்பமோ அங்கே கட்டலாம் என்றார்.

இந்த சொல் இலட்சுமணனை வெகுவாகப் பாதித்தது

இராமா. எத்தகைய பாவம் செய்தீர்கள்! இத்தகைய கொடுமையான சொற்களை நான் கேட்க நேரிட்டதே என்று கூறி வருந்தினான்.

சீதை, ''இலட்சுமணா. நீ ஏன் வேதனைப்படுகிறாய் இராமர் ஒன்றும் கொடுமையான சொல் கூற வில்லையே உனக்கு விருப்பமான இடத்தில் கட்டலாம் என்றுதானே கூறினார்'' என்றாள்.

''எனக்கென்று தனி விருப்பம் உண்டா? இராமன் விருப்பம் தான் எனது விருப்பம் எனது விருப்பப்படி கட்டலாம். என்னும் போது இராமன் என்னைத் தன்னிடமிருந்து விலக்கிவைக்கிறார். அவருக்கு என்ன கெடுதல் செய்தேன்.? நான் ''மனைவி, தந்தை, தாய், செல்வம், உடமைகள், அரசு அனைத்தையும் துறந்து அவரது மலர்ப் பாதங்களே அடைக்கலமாகக் கொண்டேன் உன் இஷ்டப்படி செய் என்று கூறுகிறாரே'' என்றான்.

### பர்ணசாலை

இராமன் இலட்சுமணன் தலையை நிமிர்த்தி தலையில் மென்மையாகத் தட்டிக் கொடுத்து.

''தம்பி இந்த சிறு சொல் உன்னை மிகவும் பாதித்து விட்டது இவ்வாறு கூறியதற்கு என்னை மன்னித்து விடு என்றார்.

பர்ணசாலை கட்டும் இடத்தை அவர் குறித்துக் காண்பித்தார். இலட்சுமணன் ஆனந்தமடைந்தான்,

''உமது ஆணையை எனக்குத்தலையாயது. நான் எதற்கும் தயாராக இருக்கிறேன் மறு மொழி கூற 'மாட்டேன்.

பரதனும் அவ்வாறே அவனும் இராமன் ஆணையை மீறவில்லை. கீழ்ப்படிந்தான். ஆனால் ஒரு நிபந்தனை விதித்தான்.

''இராமா நீங்கள் வரும் வரையில் அயோத்தியில் நான் தங்கப்போவதில்லை. நந்திக்கிராமம் என்ற இடத்தில் பர்ணசாலை கட்டி உங்களைப்போல அதில் வாழ்வேன், தங்கள் தெய்வீகப் பாதுகைகள் அயோத்தியின் அரியணையை அலங்கரிக்கும் நீங்கள் திரும்பி வரும் வரையில அயோத்தியில் காலடி எடுத்து வைக்க மாட்டேன்,

அத்தகைய புதல்வர்களும், அத்தகைய சகோதரர்களும் அக்காலத்தில் இருந்தார்கள். இராமாயணச் சகோதரர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். என்று போதிக்கின்றது சீதையும் இராமனும் இலட்சிய கணவன் மனைவி உறவை சித்தரிக்கின்றார்கள். தந்தையும் மகனும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு தசரதனும் அவரது குமாரர்களும் எடுத்துக்காட்டு.

இந் நாளில் இராமாயணம் நமக்கு மிகவும் அவசியமானது. ஏனெனில் மகன் தந்தை சொற்படி கேட்பதில்லை. தந்தை மகனைப் பற்றி கவலைப்படுவதில்லை. மனைவி கணவன் சொல்லைக் கேட்பதில்லை. கணவனும் மனைவியின் அறிவுரைகளுக்கு செவிமடுப்பதில்லை சீடர்கள் குருவுக்கு கௌரவம் கொடுப்பதில்லை. குரு சீடர்கள் நலனில அக்கறை கொள்வதில்லை.

இந்தச் சூழ்நிலையில் இராமாயணம் மாணவர்களுக்கு மிக அவசியமானது இக்குறைகள் அனைத்தையும் நீக்குவதற்கு இராமாயணத்தில் உள்ள அறிவுரைகளாய்ப் பின்பற்ற வேண்டும் இதுவே நம் ஒவ்வொருவரின் முக்கிய கடமை.

> உங்கள் கடமையைச் செய்யுங்கள் ஆனால் இறைவனிடம் உங்கள் மனதை வைத்திருங்கள், இறைவனிடம் பக்தியை வளர்த்துக் கொள்வற்கு முன உலகக் காரியங்களில் பங்கு கொண்டால், அவற்றில் நீங்கள் அதிகம் சிக்கிக் கொள்ள நேரிடும். பலாச்சுளையை எடுப்பதற்கு முன் நாம் கையில் எண்ணெயைத் தடவிக் கொள்கிறோம், அப்போது தான் பலாப்பிசின் நமது கையில் ஒட்டாது.
>
> — ஸ்ரீ ராமகிருஷ்ணர் —

### இலட்சிய மனிதன்

சித்ரகூடத்தில் ஸ்ரீராமன் தங்கியிருந்த வரையில் அங்குள்ள முனிவர்களும் சாதுக்களும் ஒன்று கூடி இவ்விரண்டு மார்க்கங்களையும் பற்றி நன்கு விவாதித்தார்கள் அங்குள்ள துறவிகள் இத்தகைய பொன்னான வாய்ப்புக்கு வெகு காலமாகக் காத்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் இராமனின் தரிசனத்தை பெற்று அதில் திளைத்து மனிதனுக்குள் மறைந்திருக்கும் தெய்வத்துவத்தைப் பற்றி விவாதித்தார்கள்.

இதற்கிடையில் பரதன் சித்ர கூடத்துக்கு வந்து இராமனை அயோத்திக்கு திரும்பும்படி பல முறை பிராத்தித்தான். இராமர் மறுத்தார் ஆகவே அந்த நிபந்தனை கைவிடப்பட்டது. முடிவில் பரதன் இராமனின் தெய்வீகப் பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு, விடைபெற்று அயோத்தி திரும்பினான். இத்தகைய விவாதங்களுக்குப் பிறகு சித்ர கூடத்தில் பிரளயம் (முடிவுகாலம்) வந்துவிட்டதோ என்று தோன்றியது. முனிவர்களிடம் பல்வேறு மனக்கொந்தளிப்புக்கள் மிகுந்த அளவில் காணப்பட்டன அவர்களால் தமது ஆன்மீகத் தேடலை தொடர்ந்து நடத்த முடியவில்லை. ஒருவரிடம் ஒருவர் முணுமுணுத்துக் கொள்ளத் தொடங்கினார்கள் இராமன் இதற்கெல்லாம் காரணம் என்ன என்று யோசித்தார்.

ஒரு வயோதிகத்துறவி இராமனிடம் நெருங்கி, ''ஓ, ராமா உம்மிடம் ஒரு குறையும் இல்லை. நீ சத்தியத்தின் திருவடிவம். நீர் சத்தியத்தைப் பரிபாலிப்பவர். அரக்கர்கள் இங்கு நடக்கும் ஆலோசனைக் கூட்டத்தைப் பற்றி அறிந்து, கோபத்தில் கொந்தளிக்கிறார்கள் அவர்களது கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. ஆகவே முனிவர்களனைவரும் சித்ர கூடத்தை விட்டு இடம் பெயர்ந்து வேறிடம் செல்ல தீர்மானித்திருக்கிறார்கள் இது மட்டுமலல நீங்களும் கிரகஸ்தர் நீங்களும் இவ்விடம் விட்டு வேறிடம் சென்றால் நல்லது என்று எல்லோரும் பிரார்த்திக்கிறோம். நீங்கள் ஆற்றல் மிக்கவர் நீங்கள் திறமை மிகுந்தவர். இங்கு பெண்கள் இருப்பதால், அவர்களுக்கு அபாயகரமானது.

### தண்ட காரண்யம்

முனிவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஆலோசித்து தண்டகாரண்யத்துக்கு செல்வதென முடிவு செய்தனர். தண்டகாரண்யத்துக்குள் பிரவேசித்ததும் விராதன் என்ற ராட்ஸசன் சீதையை அபகரித்துச் சென்றான். சீதை தம்மை காப்பாற்ற வேண்டுமென்று ராம லக்ஷ்மணரை வேண்டினாள். விராதன் ஒரே சொல் கூறினான் வனத்தில் நீங்கள் எல்லாரும் வாழவேண்டும் என்று விரும்பினால் சீதையை மறந்து விடுங்கள் என்றான். சீதை உங்களுக்குச் சொந்தமல்ல என்று கூறி பல கடுமையான சொற்கள் கூறினான். இவற்றையெல்லாம் கேட்டு இராமன் விராதனுடன் போரிடச் சித்தமானான். அம்புகளின் வேதனை பொறுக்கமாட்டாமல் சீதையைக் கீழே இறக்கிவிட்டு இராம லக்ஷ்மணரை நோக்கி விராதன் ஓடி வந்தான் இராம லட்சுமணரை தூக்கிக் கொண்டு ஓடினாள்.

சீதை இன்னும் அதிக துக்கமடைந்தாள் நான் தன்னந்தனியாகக் காட்டிலிருக்கிறேனே என்னையும் தூக்கிச் செல் எனக் கதறினாள் இராமனும் இலட்சமணனும் விராதனின் இரு கைகளையும் வெட்டினர் இறக்கவில்லை இவர்களை நோக்கி விராதன் கூறினான்.

தொடரும்

வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளும் நம்பிக்கைக்கு ஒரு தெய்வமும் போதுமானது. - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மாணவர்களின் கடமை**

சத்யத்தை பேசுங்கள்
தர்மத்தை கடைப்பிடியுங்கள்
உங்கள் தாய் தந்தையரை
கடவுளாகக் கொள்ளுங்கள்

- பாபா -

## பிறரிடம் நல்லதையே காண்போம்

**- பாபா -**

ஒரு முறை யேசுகிறிஸ்து ஒரு சாலை வழியே வந்து கொண்டு இருந்தார். அங்கே ஒரு இறந்த நாயின் சடலத்தை கண்டோரெல்லாம் மூக்கை கையினால் அடைத்துக் கொண்டு 'நாற்றம் சகிக்கவில்லை' என்று தூற்றிக் கொண்டு செல்வதைக் கண்டார்

யேசு ஒருவரைக் கூப்பிட்டு, "இந்த நாய் செத்துப் போய் நாற்றம் அடைந்த நிலையிலும் அதன் பற்களைப் பாருங்கள். அது பற்பொடியோ பற்பசையோ போட்டு பல் தேய்ப்பதில்லை ஆனாலும் எவ்வளவு வெண்மையாகவும் சுத்தமாகவும் காணப்படுகின்றன" என்றார்.

எதிலும் உள்ள நல்லதையே நாம் காண வேண்டும். என்பதே இதன் கருத்து நல்லதையே பார்த்தும், நல்லதையே கேட்டும், நல்லதையே செய்தும், நல்லதையே நினைத்தும் வருவதே இறைவனை அடையும் வழி என்பதை பகவான் வலியுறுத்துகிறார்.

## அகங்காரத்தின் விளைவு

### உருவகக்கதை

ஓர் மரத்தடியில் குரங்கும் பறவைகளும் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் மழை பெய்தது பறவைகள் எல்லாம் தமது கூட்டுக்குள் வந்து தங்கியிருந்தன. குரங்கு மட்டும் நனைந்து நனைந்து ஒரு மரத்தில் ஏறி இருந்தது. பறவைகள் அதனைப் பார்த்துப் பார்த்து எள்ளி நகை ஆடின. மழை ஓய்ந்தது.

பறவைகளெல்லாம் வெளியே வந்து "குரங்காரே...! நீர் எம்மை விடப் பெரிய பிராணி அல்லவா? நீர் ஒரு கூட்டை அமைத்தால் எங்களைப் போல் நீர் மழையில் நனையத் தேவையில்லையே! என கேலி செய்து விட்டு உணவு தேடச் சென்றன

குரங்கு கோபததுடன் பறவைகளின் கூட்டை பிய்த்துத் தூளாக்கி எறிந்தது. பறவைகள் வந்து தம் இருப்பிடத்தைக் காணாது கீச்சிட்டன. இக் கதையிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது என்னவென்றால் மற்றவர்கள் துன்பப்படும் போது நாம் எள்ளி நகையாடக் கூடாது. உதவ முடியாவிட்டாலும் தொல்லை கொடுக்கக் கூடாது.

மிருஜா குலேந்திரன்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி
ஆண்டு 8

## நிலவே நீ வா!...

நிலவே நிலவே ஓடிவா...!
பைந்தமிழைப் பாடிவா...!
பசுஞ்சோலையில் உறங்கி,
பாலும் சோறும் கொண்டு வா...!
நிலவே விண் பூக்களைப் பறித்துவா !
பாடித்திரியும் எம் மழலைகள் மனதில் சூடவா..!
மானிடர் யாவரும் ஒற்றுமையாய் வாழ,
நிலவே நிலவே ஓடி வா...!

சுமங்கலி
A. M. T. K. பாடசாலை
ஆண்டு-2

## உண்மையான ஆசிரியன்

பாடசாலை தனில் ஆங்கே
பாடங்களைக் கற்பிக்கும்
வெள்ளை உள்ளத்தால்
வெற்றிக்கு வழிவகுப்பான்

ஒழுக்கத்தை ஒம்புதலை
ஓதியே எல்லோர்க்கும்
மதி தனிலே
மங்காதாய் விளக்குபவன்

மேன்மைக்குத் தெருவாகி
மேம்படுத்தக் குருவாகி
கூட்டிச் செல்லும் சாரதியாய் எம்
கூட இருப்பவன் அவன்

பக்தியை உணர்த்தி
பன்மடங்கு பரப்பி
உளளத்தில் உணர்த்தி
உரமாக நிற்பவன்

எம்மவாக்கு எங்கனமும்
எல்லா உதவியையும்
சம்பளத்திற்கு ஆகாமல்
சந்தேகம் தீர்த்திடுபவன்

உள்ளத்திற் பெரியவனாய்
உண்மையிற் பெரியவனாய்
உளந்தனில் உணர்ந்திட்ட
உண்மையான ஆசிரியன்

செல்வி. ப. கலைவாணி
வேம்படி மகளிர் கல்லூரி

## சாயி மார்க்கம்

சத்தியத்தின் உறைவிடமே ஸ்ரீ சத்திய சாயி
தர்மமே நீ எமக்குக் காட்டும் நல்வழி
சாந்தியின் ரூபமே பிரசாந்தி சாயி
அஹிம்சையே நீர் நல்கும் நன்னெறி

பிரேமையின் வடிவான பர்த்தி சாயி!
நீர் கலியுக தெய்வமோ பகவானே!
யுக யுக அவதார பிரசாந்தி பாபா
உம்மை நினைந்து நெஞ்சில் தியானம் செய்வோமே

வி. சுப்றபிரியன்
வெள்ளவத்தை

எப்போதும் உதவி செய் ஒரு போதும் உபத்திரபம் செய்யாதே. - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம் உண்டென்பதற்கு நாமே அடையாளம்

## ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

ஒரு வீட்டைப் பார்த்தால் அதைக் கட்டியவர் ஒருவர் இருக்க வேண்டும் என்று ஊகிக்கிறோம். இன்ன எஞ்சினியர் கட்டினார். என அறிகிறோம். ஒரு வண்டியைப் பார்த்தால் அதைச் செய்த ஒருவர் இருக்க வேண்டும், விசாரித்துப் பார்த்தால் அதை இன்னார்தான் செய்தார் என்று அறிகிறோம்.

ஒரு வீடு, ஒரு வண்டி என்றால் அதில் பல விசயங்கள் ஒன்றுக்கொன்று சேர்ந்து இசைவாக அமைந்திருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட உபயோகத்தை உத்தேசித்து அவை இவ்வாறு உருவாகியிருப்பது தெரிகிறது.

எனவே இந்த வண்டி. இந்த வீடு என்று ஏதோ தானாக உண்டாகி விடவில்லை. இதை ஒரு உத்தேசத்தோடு ஓர் அறிவே செய்திருக்கிறது என்று ஊகிக்கிறோம். ஒரு ஒழுங்குக்குள்ளும் கட்டுப்பாட்டுக்குள்ளும் பல வஸ்துக்களைச் சேர்த்து உண்டாக்கியிக்கிற எதைப் பார்த்தாலும் அதைச் செய்தவர் ஒருவர் இருக்க வேண்டும் என ஊகிக்கிறோம்.

அப்படியானால் எத்தனையோ ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டிருக்கும் இந்தப் பிரபஞ்சத்தைச் செய்தவராக ஒருவர் இருக்கத் தானே வேண்டும் எத்தனையோ வேறு வேறு விதமான பல வஸ்துக்களைப்பல விதங்களில் சேர்த்து வைத்துப்பல விதமான பிரயோஜனங்களை உண்டாக்கி கொண்டிருக்கிற இயற்கையை, உலக வாழ்க்கையைப் பார்க்கும் போது இவைகளை எல்லாம் உண்டாக்கி, நடத்தி வருகிற மகா சக்தி இருக்கத் தானே வேண்டும் எனத்தெரிகிறது

கெட்டிக் காரன் என்று தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் மனிதன். இத்தனையையும் இவனையும் செய்த அந்த மகா கெட்டிக்காரனைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவர் மகா கெட்டிக்காரன் மட்டுமல்ல மகா நல்லவனும் கூட.

இத்தனையும் திட்டமிட்டுப் படைத்த பேரறிவு என்பதோடு, இத்தனையையும் ரட்சிக்கும் பெருங்கருணையும் அவர், நமது கெட்டிக்காரத்தனம் அவர் தந்ததே என்று தெரிந்து கொண்டு அவரிடம் பிரார்த்தித்துக் கொண்டால் நமக்கு அவர் நல்லது செய்வார். அவர் தான் சுவாமி

கள்வனைக் கண்டுபிடிக்க மண்ணில் பதிந்த காலடிச்சுவடு இருப்பது போல் 'உள்ளம் கவர்கள்' வனான சுவாமியின் காலடி, பிரபஞ்சத்தின் எல்லா இடங்களிலும் பதிந்து கிடக்கிறது. நம் கெட்டிக் காரத்தனமும் அவரது காலடி அடையாளம் தான்.

சிருஷ்டி கர்த்தாவாக ஒரு சுவாமி இருப்பதற்கு நாமே அடையாளம். நம் ஒவ்வொருவர் உள்ளங்கையிலும் அவர் சிறிது சிறிதாகப் போட்டுள்ள ரேகை மாதிரி நம்மால் போட முடியுமா?

பிரபஞ்சவஸ்து எல்லாமே அந்த மகா திருடனின் ரேகை அடையாளம் தான். திருடன் பதுங்கி இருப்பது போல் இவரும் பதுங்கி இருப்பவர்தான். அவர் குகைக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறார். என்றே வேதம் சொல்கிறது.

நம் இதயம் தான் அந்தக் குகை . நமக்குள்ளேயே ஒளிந்து கொண்டு நமக்கு வெளியே இத்தனை அற்புதங்களைச் செய்து நம்மை ஆச்சரியப்படுத்தித் தன்னைத் தேட வைக்கிறார் சுவாமி அப்படி அவரைத் தேடுகிறது தான் பக்தி.

சுவாமி என்றால் சொத்துக்கு உரிமைக்காரர் எனப் பொருள்படும் எந்தச் சொத்து? சர்வ பிரபஞ்சமும்தான். அதிலுள்ள நாமும் அவர் சொத்துத்தான். உள்ளது அனைத்தும் அவர் ஒருவருக்கே உடமையாகும்.

'எல்லாம் உன் உடைமையே'' என்று தாயுமானவர் பாடினார். நம சொத்து, பிறர் சொத்து என்று எல்லாம் உரிமை கொண்டாடுகிறோம். உண்மையில், உரிமை கோரும் நாம், பிறர் எல்லோருமே அவருடைய சொத்துத்தான். அவர் இலலா விட்டால் இந்தப் 'பிரபஞ்சமுமில்லை. நாமும் இல்லை. நாம் உரிமை கோரும் சொத்தும் இல்லை.

விஞ்ஞானிகள் புதிது புதிதாக இயந்திரங்கள் செய்கிறார்கள ஆனால் இதற்கெல்லர்ம் அடிப்படையில் எந்த மூலப்பொருட்களை வைத்துக் கொண்டு செய்கிறார்களோ அவை சுவாமி செய்தது தான் நாம் அவர் செய்ததை எடுத்து வேறு ரூபத்தில் செய்கிறோமே தவிரப் புதிதாக எதுவும் செய்யவில்லை.

'மூலப்பொருளைச் செய்' அணுவை உண்டாக்கு என்றால் எந்த விஞ்ஞான நிபுணனாலும் அது முடியாத காரியம்

நம் சொத்து என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பதை நம் இஷ்டப்படி விநியோகிக்க உரிமை பெற்றிருக்கின்றோம் அல்லவா? அப்படியே சுவாமியின் சொத்தாகிய நாமும் நம்மை அவர் இஷ்டப்படி நடத்தட்டும் என்று விட்டு விட்டால் நமக்கு எந்தப் பாரமும் இல்லை ஒரே ஆனந்தம் தான்.

இப்போது நான் நான் என்று எதையோ சொல்லிக் கொண்டு அலைகிறோமே உண்மையில் இது அவருக்குத்தான் சொந்தம் என்று புரிந்து விட்டால் பின்பு நாமாக கிடந்து அலைய மாட்டோம்.

நமக்கென்று சொந்தமாக ஒரு ஆசையும் வெறுப்பும் பாராட்டுவதற்கு உரிமை இல்லை• என்று தெரிந்து விட்டால் ஒரே நிம்மதி தான்.

சுவாமி என்கிற வார்த்தையே நமக்கு நம்மிடமே எந்த சொந்தமும் இல்லை நாம், அவர் தன் இஷ்டப்படி விநியோகிக்க உரிமை பெற்றிருக்கிற அவருடைய சொத்துத்ததான். என்பதை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது. இப்படி உணர்வது தான் பக்தியின் இலட்சியமான சரணாகதி என்பதாகும்

ஆதாரம்: தெய்வத்தின் குரல்

7ம் பக்கத் தொடர்ச்சி

## துன்பத்திற்கு காரணம்......

இந்த நிலையிலே ஒரு நாள் அவளுடைய முற்பிறவியின் பயனாக பகவான் புத்த தேவரின் கிருபை அவளுக்கு கிடைத்தது.

ஒரு சமயம் புத்தபிரான் குழுமியிருந்த மக்களுக்கு அறபோதனை செய்து கொண்டிருந்தார் அப்போது தற்செயலாக அவர், இந்தப் பைத்தியக்காரியைப் பார்த்தார் அந்தத் தயாளமூர்த்தி அவளைச் சுய நிலைக்கு மீளுமாறு கருணை செய்தார்.

பைத்தியம் தெளிந்த படாசாரா தன்னுடைய பைத்தியக்காரியின் உடைக் கோலங்கள் எல்லாவற்றையும் மாற்றிக் கொண்டு புத்ததேவரின் முனனால் வந்தாள் அவரிடம் தனக்கு நேர்ந்த எல்லாக் கஷ்டங்களையும் விளக்கமாக எடுத்துச் சொன்னாள் தயாளுவான புத்தபிரான் அவளைத் தவ வாழ்க்கைக்கு நிவேதனமாகச் சமர்ப்பிக்கும் எண்ணம் கொண்டார். அவர் கருணை பொங்க அவளிடம மகளே! இதைப் போல உற்றார் உறவினர்களை இழந்து நீ கண்ணீர் பெருக்கியது உனது முன் ஜன்மங்களில் எத்தனை எத்தனை தடவைகளோ! அம்மா நீ சிந்திய கண்ணீரை எல்லாம் சேர்த்தால் நான்கு கடல்கள் நிரம்பி வழியும் மகனோ, மகளோ, வேறெந்த உறவினராலோ ஒருவருடைய துன்பத்தைப் போக்க முடியாது துன்பங்கள் இல்லாதது ஒப்புயர்வற்றது நிர்வாணப்பேறு பெற்ற நிலையாகும் என்று வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளை எடுத்துச் சொன்னார்,

கொடும் துன்பங்களும் செய்த பாவங்களும் கடும் வினைகளும் மெய்ஞ்ஞானியின் கடைக்கண் பார்வைபட்ட மாத்திரத்திலேயே விலகி ஓடிவிடும் என்பது படாசாராவின் விஷயத்தில் உண்மையே ஆயிற்று படாசாரர்வின் மனம் தெளிந்தது. உலக வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே காணும் பரிபக்குவ நிலையும் அவளுக்கு வந்தது அதன் விளைவாக அவள் பிக்ஷுணியாக பௌத்த சங்கத்தில் சேர்ந்து துறவற வாழ்க்கையை மேற்கொள்ளும் பேறு பெற்றாள்.

படாசாரா முதலாவது தரத்தைச் சேர்ந்த மிக உயர்ந்த பிக்ஷுணியாக துறவொழுக்கத்தை முழு அளவில் கைக்கொண்டாள் ஏராளமான தெய்வீகக் காட்சிகளைப் பெற்றவள் ஆகவும் பௌத்த தத்துவங்களில் தேர்ந்தவளர்களும் ஆனாள். அர்ஹத் என்று பௌத்தம் குறிப்பிடும் பரிபூரணம் அடையப்பெற்ற மகான்களில் ஒருவராகவும் ஆனாள்.

அவளுடைய பரிபூரண நல்லொழுக்கத்திற்காகவும் உயர்ந்த கடமை உணர்வுக்காகவும் பௌத்த சங்கம் படாசாரா என்ற பெயரை அவளுக்கு வழங்கியது. அவளுடைய தவ வாழ்க்கையையும் திறமைகளையும் பகவான் புத்த தேவரே பல சமயங்களில் மிகவும் புகழ்ந்து பேசி இருக்கிறார்.

படாசாராவிடம் முப்பது பிக்ஷுணிகள் பயிற்சி பெற்று பெரு நிலையை அடைந்தார்கள் தானும் தெய்வமாகி பிறரையும் தெய்வ நிலைக்குயர்த்திய படாசாராவுக்கு பௌத்த சங்கத்தின் வரலாற்றிலே என்றென்றும் புகழிடமுண்டு.

ஆனந்தம் பெருக ஆண்டவன் கரத்தை உறுதியாக பற்றிக் கொள்ளுங்கள். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் கேட்கலாம்



பக்தர்:– மோக்ஷம் என்பது என்ன?

பாபா;- பந்தம் அனைத்திலிருந்து விடுபடல் மோக்ஷமாகும். அதாவது எம்போதும் இருப்பதும் எப்போதும் நிலைத்து இருப்பதும் எப்போதும் தூய்மையாக இருப்பதுமான ஆத்ம தத்துவத்தை அடைவதும் எப்போதும் மாறிக் கொண்டும் எப்போதும் பொய்மையானதாகவும் இருக்கும் அசுத்தமான தேகத் தத்துவத்தை உதறித் தள்ளுவது.

## இறைதூதன் சிறுகதை கவிதைப் போட்டிகள்

### கவிதைகளின் முடிவுகள்

8–15 வயதுக்குட்பட்டோர் முடிவுகள்

முதலாவது பரிசு

கார்த்திகா தங்கவடிவேல்
கொக்குவில் கிழக்கு.
கவிதை: "இறைவா இவை வேண்டும்'

இரண்டாவது பரிசு

தே. சுசாந்தன்
சண்டிலிப்பாய் மேற்கு
கவிதை:- "சாந்தி"

மூன்றாவது பரிசு

சிவகௌரீசன் சிவகுருநாதன்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி
கவிதை: "பிரபஞ்ச நாயகன் சத்ய சாயி"

16–35 வயதுக்குட்பட்டோர் முடிவுகள்

முதலாவது பரிசு

செல்வி. இ. இராஜலக்சுமி
யாழ் / பல்கலைக்கழகம்
கவிதை: "வளர்த்து விடு மனிதா"

இரண்டாவது பரிசு

பிறேமசாந்தி இராமச்சந்திரன்
யாழ் / பல்கலைக் கழகம்
கவிதை: "உள்ளம் உணர்ந்து"

மூன்றாவது பரிசு

செல்வன்: சு. றமணன்
கல்லூரி ஒழுக்கை, ஆனைக்கோட்டை.
கவிதை: "வேண்டுகிறேன் பாபா"

பக்தர்:– அதை அனைவரும் அடைய முடியாது அப்படித்தானே சுவாமி.

பாபா:– ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? அதற்குரிய மேம்பாடுகளை உடைய ஒவ்வொருவரும் அடைய முடியும். முயற்சி செய்பவர்கள் அடைந்து கொண்டே இருக்கிறார்கள். நோய் வாய்ப்பட்ட ஒவ்வொருவருக்கும் மருந்து உண்ண உரிமை உண்டு. ஒரு சிலருக்கு மட்டுமே உரிமை உண்டு என்று நீங்கள் சொல்ல முடியாது. இருப்பினும் மருந்தின் விலை அதிகமாக இருப்பின் சக்தி உடையவர்கள் மட்டுமே அதை வாங்கிப் பயன் பெற இயலும். இறையருளைப் பெறுவது கடினம். அதற்கு நீ அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. உரிய விலையைக் கொடு. சாதனை மூலம் அதைப்பெறு. அந்த இறையருள் உலக நோயிலிருந்து உன்னைக் காப்பாற்றும்.

பக்தர்:- இந்தச் சாதனை யாருக்கு மிகமிக அதிகமாகத தேவை?

பாபா:- இப்போது பிறப்பு இறப்பு எனும் வெள்ளம எல்லோரையும் அடித்துச் சென்று கொணடிருக்கிறது. இந்த வெவ்ளத்திலிருந்து காப்பாறறப்பட வேண்டும. என்று மிகுந்த ஆவல் கொண்ட அவைவருக்கும் இந்த சாதனை அத்தியாவசியத்தேவை.

பக்தா:- மனிதன பிறக்கக் காரணமாக இருப்பது எது?

பாபா:- கர்மாவின் பாதிப்புத்தான்

பக்தர்:– கர்மா எத்தனை வகைப்படும்?

பாபா:– நல்லது கெட்டது, இரண்டும் கலந்தது என்று மூன்று வகைப்படும், நல்லதும் கெட்டதும் சேராத ஞானியின் கர்மாவைச் சேர்த்து நான்காகவும் சிலர் கூறுகின்றனர்.

பக்தர்:- கெட்ட கர்மா என்பது என்ன?

பாபா:– அது துஷ்கர்மா எனப்படும், கடவுள் பயம் இல்லாத செயல்கள் அல்லது பாவத்துக்கு ஆளாக்கும செயல்கள் அனைத்தும் காமம். க்ரோதம், லோபம், மோஹம், மதம். மாத்சர்யம், ஆகிய ஆறின் உந்துதலால் செய்யப்படுபவை அனைத்தும் மனிதனிடமுள்ள மிருக உணர்வை வெளிப்படுத்தும் செயல் அனைத்தும் விவேகம் விசக்ஷணம், வைராக்யம் இல்லாத செயல்கள் தயை, தர்மம் சத்யம, சாந்தி பிரேமை இல்லாத அனைத்தும் துஷ்கர்மாக்கள் ஆகும்

பக்தர்:- சத் கர்மாக்கள்......

பாபா;– பகவான் பயம் பாவபயம், உள்ள செயல்கள் சத்யம், தர்மம், சாந்தி, ப்ரேமை ஆகியவற்றுடன் செய்யப்படும் சகலமும் சத் கர்மாக்கள் ஆகும்.

பக்தர்:- கலப்பு (மிஸ்ர) கர்மாக்கள் யாவை?

பாபா;- அவை வினோதமானவை. அந்தச் செயல்கள் நல்லவையாக இருப்பினும் வெளிப்படையாக கடவுள் பயமும் பாவ பயமும் உள்ளவையாக இருப்பினும், நேர் எதிர்மாறான உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துபவையாக இருக்கும். உதாரணமாக ஓய்வு இல்லங்களையும் தண்ணீர் பகிர்ந்தளிக்கும் மையங்களையும் துவங்கும் மக்கள் வேலைக்காரர்களுக்கு முறையாகவும் நன்றாகவும் கூலி தருவதில்லை. சிறிது புகழ் பெறுவது அவர்களது நோக்கம். ஏழைகளுக்கு அவர்கள் பயனற்ற துணிகளையும் செல்லாத காசுகளையும் தருகின்றனர். அவர்கள் எதைச் செய்யினும் அதன் நோக்கம் விளம்பரமே.

பக்தர்:- ஞான கர்மாவைப் பற்றியும் கூறினீர்கள் சுவாமி

பாபா - ஆமாம், இரட்டை நிலைகளின் பந்தத்திலிருந்து, உலகப் பொய்மையிலிருந்து விடுபடுவதற்கும் சத்யம், தர்மம், சாந்தி, ப்ரேமை முதலிய மேமபாடுகளை வளர்த்துக் கொள்வதற்கும் உரிய வழியை புனித சாத்திரங்களிடமிருந்தோ கற்றுக் கொள்வதற்காகச் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் ஞான கர்மா எனப்படும். தனிநபர் ப்ரபஞ்ச பூரணத்துடன் ஐக்யமாவதற்கு வழிநடத்தும செயல்கள் ஞானகர்மாவாகும்

### சிறந்த கவிதைகள் சில

1) கவிதை: "உன்னடி பணிந்தேன்"
எழுதியவர்: செல்வராணி செல்லையா
சண்டிலிப்பாய்

2) கவிதை: "இதோ உன்பாதை"
எழுதியவர்: பா. அகிலா
மானிப்பாய்

3) கவிதை: "அன்னையை மதி
எழுதியவர்: தங்கராசு சுதர்சன்
டச்சுவீதி, உடுவில்

4) கவிதை: 'நிம்மதி"
எழுதியவர்: தனுஜா சுந்தரலிங்கம்
கல்லூரி ஒழுங்கை ஆனைக்கோட்டை

5) கவிதை: ஓ மனிதப் பிறவிகளே
எழுதியவர்: திருமதி ந. சக்தியா
நவாலி வடக்கு

6) கவிதை: மேம்பாட்டுக் குணங்களால்
எழுதியவர்: கிருபாமூர்த்தி கிஷாந்

உங்கள் கவிதைகள் யாவும் ஆனி ஆடி 'இறைதூதன்' பத்திரிகைகளில் பிரசுரமாகும் என்பதை அறியத்தருகிறோம். பரிசு வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் இப்போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தினரால் கே கே. எஸ் வீதி, பூநாறிமரத்தடி, ஸ்ரீ சாயி அச்சகத்தில் அச்சிடபெற்று 12 – 05 1999 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org